# நற்றிணையில் கணியம் (சோதிடம்)

**டோ. யா. அமல்ராஜ்[1] & முனைவர். பூ. லலிதா பாலா [2]**
**[1] முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**[2] உதவிப் பேராசிரியர்,**
**சாஸ்த்ராநிகர்நிலைப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613401.**

74

**ஆய்வுச்சுருக்கம்**

நற்றிணையில் கணியம் அல்லது சோதிடம் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. சோதிடம் வெறும் யூக சாஸ்திரம் அல்ல சோதிடத்தின் அடிப்படையான வானியல் அறிவியலாக கருதப்படுவது போன்று சோதிடமும் அறிவியலே. பழந்தமிழ்ப் புலவர்கள் மட்டுமின்றி மக்களும் சோதிடத்தை அறிந்திருந்தனர். பழந்தமிழருக்கு வானியல் குறித்த அறிவு இருந்திருக்கிறது. வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்றங்கள் குறித்த முன்னறிவிப்பு செய்வதற்கும்.சரியான விதைப்பு மற்றும் அறுவடைக் காலத்தை தேர்வு செய்வதற்கும் சோதிடம் சமூகத்திற்கு பயணளித்திருக்கிறது.

**திறவுச்சொற்கள்:** சோதிடம், கணியம், வானியல், அறிவியல், நற்றிணை, பழந்தமிழர்

**முன்னுரை**

சோதிடம் என்பது அறிவியலா? இது சோதிடத்தை ஏற்க மறுக்கும் பலரும் முன் வைக்கும் பொதுவான கேள்வி ஆகும்.இதற்கு விடை காண முயன்றால்,சோதிடம் என்பது வானியலை அடிப்படையாகக் கொண்டது.வானியல் அறிவு இன்றி சோதிடம் இல்லை.எனவே பழந்தமிழரின் வானியல் அறிவை சோதிடத்தோடு ஒப்பிட்டு பார்க்கும் போது சோதிடம் அறிவியலா என்ற கேள்விக்கு விடை காண முடியும்.ஏனெனில் கோள்களின் இருப்பு, இயக்கம் பற்றி பழந்தமிழர்க்கு இருந்த அறிவு,தமிழர் நாட்காட்டி போன்ற சங்க இலக்கியங்களில் காணப்படும் தரவுகளை இன்றைய நவீன அறிவியலோடு ஒப்பிடும்போது வியப்பளிப்பதாக உள்ளது.

மேலும் சோதிடம் அறிவியல் இல்லை என மறுப்பதற்கு காரணமாகக் கூறப்படுவது சூரிய மையக் கோட்பாட்டை அறிவியல் கடைபிடிக்கப்படுகிறது அதற்கு மாறுபட்ட முறையில் சோதிடம் புவி மையக் கோட்பாட்டை கடைபிடிக்கப்படுகிறது என்பதாகும். புவியில் உள்ள மக்களுக்கு சோதிடம் பார்க்கப்படுகின்ற காரணத்தால் சோதிடம் புவி மையக் கோட்பாட்டை பின்பற்ற வேண்டிய தேவை இருக்கிறது. மேலும் பார்வைக் கோணங்கள் தான் வேறானது தவிர அவை சுட்டும் பொருள் ஒன்று தான். ஒரு பனுவல் வெவ்வேறு நோக்கில் ஆராய்வதைப் போன்றது தான் இதுவும். ஒரு நோக்கிலான ஆய்வு முறை சரியானது இன்னொரு நோக்கிலான ஆய்வு முறை தவறானது என எவ்வாறு சொல்ல முடியாதோ அதைப் போன்றதே இதுவும். ஆக சோதிடமும் அறிவியல் எனக் கொள்ளலாம்.

இக்கட்டுரையில் நற்றிணையில் மட்டும் இடம்பெற்றுள்ள சோதிட குறிப்புகள் மூலம் பண்டைத் தமிழரின் வானியல் அறிவு குறித்து ஆராயலாம். ஜோதிடம் என்ற சொல்லாட்சி சங்க நூல்களில் இடம்பெறவில்லை கணி என்ற சொல் சோதிடரைக் குறிக்கும் சொல்லாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது.இதனை "அறிவன், கணி என்ற சொற்கள் பழந்தமிழில் இருக்கக் காப்பியக் காலந்தொட்டு சோதிடர் என்ற சொல் தமிழ் இலக்கியங்களில் வழங்கப்பட்டிருப்பதைக் காண முடிகிறது" என்ற செய்தி மெய்ப்பிக்கிறது.நற்றிணையில் கணியம் சார்ந்த குறிப்புகள் ஒன்பது பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

**திங்கள்(சந்திரன்)**

**சந்திர கிரகணம்**

**பாம்பூர் மதியின் நுதல் ஒளி பரப்பவும்(நற்.128:2)**

என்ற இப்பாடல் வரியில் 'புலவர்.நற்சேந்தனார்' தலைவியின் நெற்றிக்கு உவமையாக சந்திரனைக் குறிப்பிட்டுள்ளார். 'இராகுவினாலே கவரப்பட்ட திங்களின் ஒளி கெடுவதைப்போல உன்னுடைய நெற்றியின் ஒளி மறைவுபட்டிருக்கிறது' என தலைவன் தலைவியிடம் கூறுவது போல இப்பாடல் வரிகள் அமைந்துள்ளன. இதன் மூலம் சந்திர கிரகணம் என்ற வானியல் நிகழ்வு குறித்த அறிவு சங்க இலக்கிய காலந்தொட்டே தமிழருக்கு இருந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

**பகுதி சந்திர கிரகணம்**

பகுதி சந்திர கிரகணம் பற்றியும் நற்றிணையில் குறிப்பு உள்ளது. "பூமி சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் நகரும் போது ஒரு பகுதி சந்திர கிரகணம் ஏற்படுகிறது, ஆனால் மூன்று வான உடல்களும் விண்வெளியில் ஒரு நேர் கோட்டை உருவாக்கவில்லை. அது நிகழும்போது, சந்திரனின் மேற்பரப்பின் ஒரு சிறிய பகுதி பூமியின் நிழலின் இருண்ட, மையப் பகுதியால் மூடப்பட்டிருக்கும், இது அம்ப்ரா என்று அழைக்கப்படுகிறது"

**"... அகலிரு விசும்பின் அரவுக்குறை படுத்த**
**பசுங்கதிர் மதித்து அகனிலாப் போல...".(நற்.377:6-7)**

எனும் இப்பாடலிலும் தலைவியின் நெற்றிக்கு உவமையாகவே சந்திரனைக் குறிப்பிட்டுள்ளார் 'புலவர் மடல் பாடிய மாதங்கீரனார். 'அகன்ற கரிய ஆகாயத்தில் அரவினால் சிறிது விழுங்கி குறை படுத்தப்பட்ட நிலவின் ஒளி வீசுகின்ற சிறிய கூந்தல் சேர்ந்த நெற்றியை உடையாள்' என கூந்தலின் ஒரு பகுதி தலைவியின் முகத்தை மறைக்கிறது அது அரவு (பாம்பு-ராகு) விழுங்கி அதாவது சிறிதளவு விழுங்கி குறைக்கப்பட்ட நிலவின் ஒளியைப் போல் ஒளி வீசக்கூடிய நெற்றியை உடையவள் என உவமிக்கிறார்.

**நிறைமதி**

**மால் பிடர் அறியா நிறையுறு மதியஞ்(நற்.196:3)**

தலைவி திங்களிடம் பேசுவது போல இப்பாடல் அமைந்துள்ளது.பல கூறுகள் ஒன்றாகச் செறிந்தாற் போன்ற பலவாய கதிர்களின் இடையே பாலை முகந்து வைந்தாற் போன்ற

குளர்ச்சியையுயை, எல்லாக் கலைகளும் நிறைவுற்ற திங்களே நீ நேர்மையும் நிறைவும் உடையதாய் இருக்கிறாய் என திங்களைப் பற்றி தலைவி பெருமையாக பேசி அதனிடம் தலைவன் இருக்குமிடத்தை எனக்கு காட்டுவாயாக என இரந்து வேண்டிக் கொள்வதைப் போல பாடலை அமைத்துள்ளார் 'புலவர் வெள்ளைக்குடி நாகனார் '.இதில் கலைகளுக்கு அதிபதியாக சந்திரனைக் கூறியுள்ளர்.

மேலும் குளர்ச்சியுடைய கிரகமாகவும், நீர்மை, நிறைவு கொண்ட கிரகமாகவும் வருணனை செய்துள்ளர். இவ்வருணனை வெறும் வருணனை மட்டுமே அல்ல இது சந்திரனின் செயல்பாடுகளாக ( காரகத்துவமாக )சோதிடத்தில் கூறப்படும் 'சந்திரன் குளுமையான கிரகம். நீர் கிரகம் என்று சொல்லப்படும்' செய்திகளையே குறிக்கிறது.

**இன்று நக்கனைமன் போலா என்றும்**

**நிறையுறு மதியின் இலங்கும் பொறையன்(நற்.346:7-8)**

“எக்காலத்தும் நிறைவுற்ற திங்கள்போல விளங்குகின்ற பொறையனது தண்ணிய கொல்லிமலைப் போல” என பெண்ணின் வளைந்த மெல்லிய தோள்களுக்கு உவமையாக பாடியுள்ளார். 'புலவர் எயினந்தை மகன் இளங்கீரனார்'.இப்பாடலிலும் திங்களின் குளிர்ச்சி போல பெண்ணின் தோள்கள் குளிர்ச்சி தருவதாக பாடியுள்ளார். குளிர்ச்சி என்பதும் சந்திரனின் செயல்பாடுகளாக(காரகத்துவமாக) சோதிடவியலில் கூறப்படுகிறது.

**நிறைமதி நாளில் கடல்பொங்குதல்**

நிறைத்திங்கள் நாளில் கடலலை பொங்கியெழுவதைப் போல தலைமகள் மனவெழுச்சி கொண்டு மகிழுமாறு வருவாயாக என தலைவனை அழைக்கும்படி

**இரவுத்தலை மண்டிலம் பெயர்ந்தென உரவுத்திரை**

**எறிவன போல வெரூஉம்(நற். 375:7-8)**

என்ற இப்பாடலை அமைத்துள்ளார் 'புலவர் பொதும்பில் கிழார்மகன் வெண்கண்ணி' சாதகத்தில் சந்திரனின் நிலையை வைத்து ஒருவரின் மனவெழுச்சி மற்றும் மனப்பிறட்சி நிலையை அறியலாம் என்பது சோதிடவியல் கருத்து. இதற்கு உதாரணமாக அமாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் மன நோயால் பதிக்கப்பட்டவர்கள் ஆக்ரோஷமாக காணப்படுவதைக் கூறுவர்.இதற்குச் சான்றாக“இந்தியாவின் பழங்கால நம்பிக்கை சந்திரன் தண்ணீரைக் கட்டுப்படுத்துபவர் என்றும், பிரபஞ்சம் முழுவதும் சுற்றிக் கொண்டிருப்பதாகவும், அனைத்து உயிரினங்களையும் தாங்குவதாகவும் கூறுகிறது. மற்ற கிரகங்களைப் போலவே சந்திரனும் மனிதர்கள் மீது கணிசமான அளவு செல்வாக்கை செலுத்துவதாக நம்பப்படுகிறது. பௌர்ணமி நாட்களில் மனநலக் கோளாறுகளால் அவதிப்படுபவர்களின் உணர்வுகள் எப்போதும் பாதிக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது.” என்ற இவ்வாய்வுக் கருத்தைக் கொள்ளலாம்.

சந்திரன், மனம், நீர் மூன்றுக்குமிடையேயான தொடர்பு குறித்து சோதிடவியல் கூறும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இந்த பாடல் வரிகள் அமையப்பெற்றுள்ளதையும்

அம்மூன்றுக்குமிடையேயான தொடர்பையும் அறிய முடிகிறது.

**ஞாயிறு**

'புலவர் மதுரை மருத நிளநாகனார்'உயர்ந்து வரும் அலையை உடைய கடலின் மீது பலரும் வணங்கும்படி தோன்றி அனைவரும்ரும் மகிழ விளங்கிய ஞாயிற்றைப் போன்று புகழை உடைய தலைவனே என ஞாயிறை தலைவனோடு

**முந்நீர் மீமிசை பலர் தொழத் தோன்றி**

**ஏமுற விளங்கிய சுடரினும் (நற்.283:6, 7)**

என்ற பாடலில் உவமித்திருக்கிறார் . 'நவக்கிரகங்களில் முதன்மையான கிரகம் சூரியன்தான்' ஞாயிறு அனைத்து கிரகங்களுக்கும் தலையாக ஜோதிடத்தில் குறிக்கப்படுகிறது.ஜோதிடத்தில் சூரியனின் செயல்பாடுகளாக (கார தத்துவங்கள்)கூறப்படும் தலைமைப் பண்பும் அத்தலைமைக்குக் கிடைக்கும் மதிப்பும் தலைவனின் குணத்துடன் உவமிக்கப்படுகிறது.

**எழுமீன் (உத்திர துருவத்தை சூழ்ந்து வரும் ஏழு முனிவர்கள்)**

"நீலமணி போன்ற நிறத்தையுடைய ஆகாயத்தின் கண்ணே தோன்றி உலகத்தாராலே கைதொழப்படுந்தகுதி முனிவரின் தோற்றமாகிய ஏழுமீன்களைப்போல" என

**கைதொழு மரபின் எழுமீன் போல(நற்.231:2)**

என்ற இப்பாடலில் தலைவன், தலைவியின் காதலுக்கு உவமையாக பாடியுள்ளார் 'புலவர் இளநாகனார்'.இப்பாடலில் எழு மீன் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது.எழுமீன் என்றால்"சப்தரிசி அல்லது எழுமீன் என்றழைக்கப்படும் விண்மீன் கூட்டம் இது ஏழு மீன்கள் அடங்கிய ஒரு விண்மீன் கூட்டம் ஆகும். கடலில் செல்லும் பொழுது வழியறிய (வடதிசையை அறிய) வடமீன் (polaris) எனும் மீனை அடையாளம் காண இந்த எழுமீன் கூட்டம் (USra Major) உதவும். உத்திரதுருவம் என்பது வடதிசையைக் குறிக்கும்".(விக்கிப்பீடியா) என்று விக்கிப்பீடியா விளக்கமளிக்கிறது.இப்பாடல் வாயிலாகவும் பண்டைத் தமிழரின் வானியல் அறிவு நமக்குப் புலனாகிறது.

**விடிவெள்ளி**

"கீழ் பாற்கண் விடியலிலே தோன்றுகின்ற வெள்ளிபோல்" என் காதலிஎன் அருகிலே இருக்குமாறு எனக்குக்கிடைப்பாளா? என தலைவன் தன் நெஞ்சுக்கு சொல்வது போல பின்வரும் இப்பாடலை அமைத்துள்ளார் புலவர் பரணர்".

**குணக்குத்தோன்று வெள்ளியின் எமக்கும் ஆர்வருமே.(நற்.356:9)**

வெள்ளி எனும் சுக்ரன் சூரியனிலிருந்து இரண்டாவதாக அமைந்துள்ள கோள் ஆகும். நிலவுக்கு அடுத்ததாக வெள்ளியே ஒளி மிகுந்தது. சூரியனின் உதயத்திற்கு முன் வெள்ளி தன் உச்ச ஒளியை அடைகிறது எனவே இது விடிவெள்ளி என அழைக்கப்படுகிறது. எனவே தான் மேற்கண்ட பாடலிலும் கீழ்வானில் விடியலிலே தோன்றுகின்ற வெள்ளி போல என விழவெள்ளியைப் பற்றி

கூறியுள்ளார்.

**வேங்கை கணி**

வேங்கை அரும்பும் காலம் தினை முற்றும் ஆதலின் அரும்பியது கண்ட கானவர் தினை கொய்ய வருவர். அது சமயம் சோதிடம் வல்லார் போறலின் வேங்கை கணியெனப்பட்டது.- பின்னத்தூர். அ.நாராயண சாமி ஐயர்.

**காரரும்பு அவிழ்ந்த கணிவாய் வேங்கை (நற்.373:6)**

வேங்கைகை அரும்பும் காலத்தில் தினைப்பயிர் விளைச்சலுக்கு வரும். அப்போது கானவர் அதனை அறுவடை செய்வர். அதே காலத்தில் சோதிடரும் மக்களிடத்தில் சோதிடம் பார்க்க வருவர். எனவே ‘வேங்கை கணி’ என்ற சொல்லாடல் இப்பாடலில் வந்துள்ளது என பின்னத்தார். அ.நாராயண சாமி ஐயர் உரை தந்துள்ளார்.இதன் மூலம் சோதிடர்கள் மக்களிடத்தில் செல்வவளம் மிகுதியாக இருக்கும் போது கணியம் கூற வருவர் என்ற செய்தியை அறிய முடிகிறது.

**முடிவுரை**

கணியம் (அ) சோதிடம் என்பது தமிழர் வாழ்வியலோடு பிண்ணிப் பிணைந்த ஒன்றாக இருக்கிறது. இது இன்று மட்டுமின்றி சங்க காலம் முதலே இவ்வாறாக இருந்ததற்கு சங்க இலக்கியங்களில் பல சான்றுகள் உள்ளன. சோதிடம் என்பது வெறுமனே தனி மனித எதிர்காலத்தைக் கூறுவதோடு மட்டுமின்றி புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களை முன்னுணர்ந்து தற்காத்துக் கொள்ளவும். நடவு, அறுவடை போன்ற வேளாண் பணிகளை எப்போது எப்படி துவங்க வேண்டும் என்ற முறைமைகளையும், பஞ்சம் ஏற்படும் காலங்களை முன்னறிவித்து சேமிப்பை மிகுதிப்படுத்தவும் என தனி மனித வாழ்வுக்கு மட்டுமின்றி நாட்டின் வளர்ச்சிக்கும் சமூக வளர்ச்சிக்கும் பங்காற்றியுள்ளது. இன்றளவும் கூட எவ்வித நவீன அறிவியல் வளர்ச்சியும் அடையாத காலக்கட்டத்தில் கோள்களின் நிலை பற்றிய துல்லியமான கணிப்பைத் தந்த சோதிடக்கலையை வியந்துதான் பார்க்கின்றனர்.

மேலும் “கோள்களின் இயக்கம் பற்றிய கெப்ளரின் விதி என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. இந்த கெப்ளரே ஒரு ஜோதிடராக இருந்ததாக கூறப்படுகிறது.இதற்குச் சான்றாக இரண்டாம் ருடால்ஃப் மன்னரின் அரசவைக் கணிதவியலாளராகவும், ஜெனரல் வாலன்ஸ்டைனின் அரசவை ஜோதிடராகவும் பணியாற்றினார்.

பண்டைத் தமிழ்ப் புலவர்கள் மட்டுமின்றி தமிழர்கள் பலரும் சோதிடம் அறிந்தவர்களாக இருந்தனர் என்பதற்கு இக்கட்டுரையில் காணப்படும் பாடல் வரிகளே சான்றுரைக்கிறது.இவ்வாறாக பழந்தமிழரின் சோதிடம் மற்றும் வானியல் குறித்த அறிவை நற்றிணை வாயிலாக அறிய முடிகிறது.

**துணைநூற் பட்டியல்**

1.ஔவை துரைசாமி, நற்றிணை, தமிழ்மண் பதிப்பகம், சென்னை.

2.பாலசுப்ரமணியன்.கு.வெ, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

3.பின்னத்தூர் நாராயணசாமி, நற்றிணை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி

4.மகாலட்சுமி, தி. இலக்கியத்தில் சோதிடம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

5.மாதேஸ்வரன்.மு. ஜோதிட இரகசியம், விஜயா பதிப்பகம், கோவை

**இணைய இணைப்புகள்**

1.https://www.timeanddate.com/eclipse/partial-lunar-eclipse.html

2.https://openurl.ebsco.com/contentitem/doi:10.5958%2F0973-9130.2018.00142.1?sid=ebsco:plink:crawler&id=ebsco:doi:10.5958%2F0973-9130.2018.00142.1

3.https://www.hindutamil.in/news/blogs/67233-10.html

4.https://ta.wikipedia.org/